**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8044311

1. District : மாவட்டம் நாமக்கல் PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு நாமக்கல் Year: ஆண்டு 2021 FIR No.: மு.த.அ. எண் 03/AC/2021 Date: நாள் 27.04.2021

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7(b)
(ii) Act சட்டம்: Act 1988 as amended by Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: the Prevention of Corruption (Amendment) Act-2018. Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 1) 18.03.2021 சுமார் 15.00 மணி. 2) 12.04.2021 சுமார் 10.45 மணி.
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 3) 15.04.2021 மாலை சுமார் 18.00 மணி. 4) 24.04.2021 13.45 மணி மற்றும் 16.45 மணி.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 27.04.2021 at 13.30 Hrs. Time : நேரம்
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Volume - II 27.04.2021 at 13.30 Hrs. Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 3 km மேற்கு, சுமார் 58 km மேற்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி 1) மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகம், நாமக்கல். 2) ஸ்ரீ ராகவேந்திரா பாலிடெக்னிக் கல்லூரி, குமாரபாளையம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. விஜயகுமார் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் செங்கோட கவுண்டர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு வயது 43 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் (g) Address : முகவரி க.எண்: 5/60-8 காந்தி நகர் 3-வது வீதி பள்ளிபாளையம் ரோடு, குமாரபாளையம், நாமக்கல் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) திருமதி. ஜான்சி, மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர், நாமக்கல்
2) திரு. சேகர், இணை மறுவாழ்வு அலுவலர், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம் நாமக்கல்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.18(HCL-12)

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / Involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு ______________

Signature of the Officer in-charge, Police Station 27/04/2021
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 27/04/21.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
27.04.2021 at 17.00 Hrs.

Name: பெயர் அ.தி. ஜெய்குமார்
Rank: நிலை ......................No. எண் .........
காவல் நிலைய கண்காணிப்பாளர்
2ஆ.த.க.பிரிவு, நாமக்கல்.

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

**நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.3/AC/2021 u/s 7(b) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவலறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...**

இன்று 27.04.2021-ஆம் தேதி செவ்வாய்க்கிழமை பகல் 13.30 மணிக்கு காவல் துணை கண்காணிப்பாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம், பள்ளிபாளையம் ரோடு, காந்தி நகர் 3-வது தெரு, கதவு எண்.5/60-8 என்ற முகவரியில் வசிக்கும் திரு.செங்கோடகவுண்டர் என்பவரின் மகன் திரு.S.விஜயகுமார் (வயது-43) என்பவர் நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட எழுத்து மூலமான புகாரினை சமர்ப்பித்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புதல் S. விஜயகுமார் (வயது-43), S/o.செங்கோட கவுண்டர், 5/60-8காந்தி நகர், 3-வது வீதி, பள்ளிபாளையம் ரோடு, குமாரபாளையம், நாமக்கல் மாவட்டம். பெறுதல் காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, நாமக்கல் மாவட்டம். ஐயா, நான் M.E., Industrial Engineering படித்துள்ளேன். நான் நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் ஸ்ரீ ராகவேந்திரா பாலிடெக்னிக் கல்லூரியின் முதல்வராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2011-ஆம் ஆண்டு ஸ்ரீ கம்பத்துக்காரர் தொண்டு அறக்கட்டளை என்ற பெயரில் அறக்கட்டளை ஆரம்பித்து அதன் தலைவராக நானும், எனது மனைவி திருமதி.உமாமகேஸ்வரி செயலாளராகவும் இருந்து வருகிறோம். இந்த அறக்கட்டளை மூலம் கடந்த 2014-15-ல் ஸ்ரீகம்பத்துக்காரர் மாற்று திறனாளிகளுக்கான சிறப்பு பள்ளி ஒன்றை கதவு எண்.5/60-8 காந்தி நகர், 3-வது தெரு, பள்ளிபாளையம் ரோடு, குமாரபாளையம் என்ற முகவரியில் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் தற்போது 24 மாற்று திறனாளி குழந்தைகள் படித்து வருகிறார்கள். மேற்படி பள்ளியில் பயிற்றுனராக சிறப்பு ஆசிரியர்கள் திருமதி.லாவன்யா, திருமதி.லிடியா கண்மணி ஆகியோரும், பிசியோதெரபிஸ்ட் ஆக திரு.மகேந்திரன் அவர்களும், திருமதி.ரேவதி, திருமதி.மஞ்சு ஆகியோர் உதவி ஆசிரியர்களாகவும் பணியாற்றி வருகிறார்கள். திருமதி.ராஜலட்சுமி என்பவர் குழந்தைகள் பராமரிப்பாளராகவும், திருமதி.லட்சுமி மாதேஸ் என்பவர் தூய்மை பணியாளராகவும் பணிபுரிந்து வருகிறார்கள். இப்பள்ளிக்கு கடந்த 2016-ல் அரசு அங்கீகாரம் பெறப்பட்டு தற்பொழுது வரை புதுப்பிக்கப்பட்டுள்ளது. எங்களைப் போல்

தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்படும் மாற்று திறனாளிகளுக்கான சிறப்பு பள்ளிகளுக்கு மாற்று திறனாளிகள் நலத்துறை மூலம் உதவிகள் கிடைக்கப் பெறுவதாக கேள்விப்பட்டு கடந்த 2019-2020-ஆம் ஆண்டில் பள்ளியில் சிறப்பு ஆசிரியர்களாக பணிபுரியும் ஆசிரியர்களுக்கான ஊதிய மானியம் பெற நாமக்கல் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அலுவலகம் மூலம் எனது மனைவி திருமதி.உமாமகேஸ்வரி பெயரில் விண்ணப்பித்தோம். அந்த நிதியாண்டில் எங்களது நிறுவனத்திற்கு ஆசிரியர்களுக்கான ஊதிய மானியம் கிடைக்கப் பெறவில்லை. மீண்டும் கடந்த 2020-2021-ஆம் நிதியாண்டிலும் சிறப்பு ஆசிரியர்களுக்கான ஊதிய மானியம் கேட்டு கடந்த ஜுன்-2020 இல் நாமக்கல் மாவட்ட மாற்று திறனாளிகள் நலத்துறை அலுவலகம் மூலம் விண்ணப்பித்தோம். அந்த விண்ணப்பத்தின் மீது விசாரணை மேற்கொண்ட மாவட்ட மாற்று திறனாளிகள் நல அலுவலர் திருமதி.ஜான்சி அவர்கள் எங்களது விண்ணப்பத்தினை சிபாரிசு செய்து அனுப்பி வைத்தார். மாற்று திறனாளிகள் நலத்துறை சார்பாக 2020-ம் ஆண்டு கொரானா காலத்தில் செயல்படுத்தப்பட்ட பல்வேறு நலத்திட்டங்களை நிறைவேற்றிட உதவியாக எங்களது தொண்டு நிறுவனம் மூலம் களப்பணி செய்தோம். கடந்த 18.03.2021 அன்று சிறப்பு பள்ளிகள் நடத்தும் தொண்டு நிறுவனங்களான சிவபாக்கியம், நியூ லைப், அனைக்கும் கரங்கள், கலர்புல் சில்ரன், எலிம், ஜெ.கே.கே. ஆகியவற்றின் பொறுப்பாளர்களை ஒவ்வொரு தொண்டு நிறுவனத்திற்கும் ஒரு நேரத்தை குறிப்பிட்டு நாமக்கல் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகத்திற்கு வரச்சொல்லி வாட்ஸ்ஆப் மூலம் தகவல் அனுப்பினார்கள். எனக்கு அன்று பிற்பகல் 2.30 மணி ஒதுக்கியிருந்தார்கள். நான் கல்லூரியில் வேலையாக இருந்ததால் மாலை சுமார் 3 மணிக்கு மேற்படி நாமக்கல் மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் சென்றேன். அவ்வலுவலகத்தில் மாவட்ட மாற்று திறனாளிகள் நல அலுவலர் திருமதி.ஜான்சி, இணை மறுவாழ்வு அலுவலர் திரு.சேகர் ஆகியோர் இருந்தனர். திருமதி.ஜான்சி மேடம் அறையில் வைத்து திரு.சேகர் அவர்களும், திருமதி.ஜான்சி அவர்களும் என்னிடம் பேசினார்கள். எங்கள் நிறுவனத்திற்கு 2020-2021-ஆம் நிதி ஆண்டிற்கான சிறப்பு ஆசிரியர்களுக்கான ஊதிய மானியம் மூன்று ஆசிரியர்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், ஒரு ஆசிரியருக்கு மாதம் ரூ.14,000/- வீதம் ஊதிய மானியம் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், எங்களது தொண்டு நிறுவன வங்கிக் கணக்கில் பணம் கிடைக்கப் பெற்றவுடன் அதில் ஒரு ஆசிரியருக்கு 12 மாதத்திற்கு ஊதிய மானியம் ரூ.1,68,000/- என்ற வகையில், இரண்டு

ஆசிரியர்களுக்கான ஊதிய மானியம் மொத்தம் ரூ.3,36,000/-ஐ அவர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வேண்டும் என்று கேட்டார்கள். நான் கடந்த 7 வருடங்களாக இப்பள்ளியை நடத்தி வருகிறேன், நிறைய செலவு செய்துள்ளேன், இவ்வருடம்தான் மானியம் கிடைத்துள்ளது. அதை கேட்கிறீர்களே, என்னால் கொடுக்க முடியாது சார் என்று சொன்னேன். அதற்கு அவர்கள் போன வருடம் கொரானா காலத்தில் நீங்கள் பள்ளியை நடத்தவில்லை, உங்களுக்கு எந்த செலவும் ஆகியிருக்காது அதனால் மொத்த தொகை ரூ.5,04,000/-இல் 50% தங்களுக்கு லஞ்சமாக வேண்டும் என்று சொல்லி அனுப்பிவிட்டார்கள். என்னிடம் கேட்டது போல் மற்ற தொண்டு நிறுவனங்களிடமும் லஞ்சமாக பணம் கேட்டுள்ளனர் என்பது தெரிந்து கொண்டேன். பின்னர் 30.03.2021 அன்று மேற்படி தொண்டு நிறுவன பொறுப்பாளர்களை நாமக்கல் அலுவலகம் வரச்சொன்னார்கள். நான் எனது அம்மாவை மருத்துவமனை அழைத்துச் சென்றுவிட்டதால் அன்று செல்லவில்லை. இணை மறுவாழ்வு அலுவலர் திரு.சேகர் எனக்கு போன் செய்து ஏன் வரவில்லை என்று கேட்டார். நான் மருத்துவமனையில் இருப்பதாக சொன்னதால் மீண்டும் பேசிக் கொள்ளலாம் என்று சொல்லிவிட்டார். 30.03.2021 அன்று எனது வங்கி கணக்கில் சிறப்பு ஆசிரியர்களுக்கான ஊதிய மானிய தொகை ரூ.5,04,000/- வரவு வைக்கப்பட்டது. அதன் பின் 12.04.2021-ம் தேதி காலை சுமார் 10.30 மணிக்கு எங்களது பள்ளியை பார்வையிட திருமதி.ஜான்சி மற்றும் திரு.சேகர் வந்தார்கள். அப்போது நான் ஸ்ரீராகவேந்திரா பாலிடெக்னிக் கல்லூரியில் இருந்தேன். ஸ்ரீகம்பத்துக்காரர் சிறப்பு பள்ளியை பார்வையிட்டுவிட்டு அருகில் உள்ள நான் பணிபுரியும் மேற்படி கல்லூரிக்கு சுமார் 10.45 மணிக்கு வந்து, எனது அலுவலக அறையில் அமர்ந்து என்னிடம் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது திரு.சேகர் எங்களுக்கு வந்த ஊதிய மானியத்தில் 50% தங்களுக்கு வேண்டும் என்று கேட்டார். நான் ஏதாவது குறைத்துக் கொள்ள முடியுமா சார் என்று கேட்டேன். அதற்கு அவர் குறைக்க முடியாது, நாங்கள் கேட்ட பணத்தை, உங்களுக்கு Location சொல்கிறேன் அங்கு வந்து கொடுங்க என்று சொல்லிவிட்டு இருவரும் சென்றுவிட்டார்கள். பின்னர் 15.04.2021-ம் தேதி இந்த வருடம் செயல்படுத்திய நிகழ்வுகள் சம்பந்தப்பட்ட போட்டோக்களை எடுத்துக் கொண்டு அலுவலகம் வரச் சொன்னார்கள். நான் அன்று மாலை சுமார் 5.30 மணிக்கு நாமக்கல் மாற்று திறனாளிகள் நல அலுவலகம் சென்றேன். அங்கு திரு.சேகர் என்னை கொஞ்ச நேரம் காத்திருக்கச் சொன்னார்கள். நான் சிறிது நேரம் காத்திருந்தேன். பின் சுமார் ½ மணி நேரம் கழித்து என்னை திரு.சேகர்

அவர்கள் அழைத்துக் கொண்டு திருமதி.ஜான்சி மேடம் அறைக்குச் சென்றார். அங்கு வைத்து என்னிடம் திருமதி.ஜான்சி அவர்கள், நாசுக்காக நாங்க உங்களுக்கு சொல்லி பார்த்தாச்சு, ஒன்றும் கண்டு கொள்ளவில்லை, உங்களுக்கு சேங்சன் ஆன பணத்தில் 50% பணம் எங்களுக்கு கொடுங்க, இல்லையென்றால் முழு பணத்தையும் திரும்ப செலுத்திவிடுங்கள் என்று சொல்லி சலான் கொடுக்கச் சொன்னார். திரு.சேகர் அவர்களும் என்னிடம் சலான் கொடுத்தார். மேலும் திருமதி.ஜான்சி அவர்கள், உங்களுக்கு முதல் தடவை இந்த மானியம் கிடைத்துள்ளது, திரும்ப செலுத்தினால் மீண்டும் வராது, ஆகையால் யோசிங்க என்று சொல்லி அனுப்பிவிட்டார்கள். பின்னர் கடந்த 17.04.2021 அன்று திருமதி.ஜான்சி அவர்கள் காலை முதல் மூன்று நான்கு முறை என்னிடம் செல்போனில் பேசி உங்க பணத்தை திரும்ப அனுப்புவதில் எனக்கு விருப்பமில்லை, ஆகையால் நீங்கள் சேகர் சாரிடம் பேசுங்கள், அவர் சொல்றபடி செய்யுங்க அவர் ரெகார்டா எழுதிட்டா ஒன்றும் செய்யமுடியாது. அதுக்கு முன்னாடி அவர்கிட்ட பேசி அவர் சொல்றத கேளுங்க என்று சொன்னார். அதனால் நான் 18.04.2021-ஆம் தேதி மாலை திரு.சேகர் அவர்களுக்கு போன் செய்தேன். அவர் போன் கட் ஆகியதால், உடனே அவர் எனக்கு போன் செய்து பேசினார். அப்போது நான் ஜான்சி மேடம் கூப்பிட்டு பேசச்சொன்னதாகச் சொன்னேன், அதற்கு அவர் ஜான்சி மேடத்திடம் கேட்டுவிட்டு சொல்கிறேன் என்று சொன்னார். அதன் பின் 21.04.2021 அன்று இரவு 8.36 மணிக்கு எனக்கு போன் செய்து திரு.சேகர் அவர்கள் மேடம் பேசிவிட்டதாகவும், உங்களுக்கு முதல் தடவை Teaching Grant வந்துள்ளது, அதுதாஎர் முக்கியம், ஆகையால் சனி, ஞாயிறு நாங்க கேட்ட பணத்தை கொண்டு வந்து கொடுக்க வேண்டி இருக்கும், வெள்ளிக்கிழமை மாலை உங்களை கூப்பிடுகிறேன் என்று சொன்னார். பின் 24.4.2021 சனிக்கிழமை அவரது மிஸ்டுகால் பார்த்து நான் அவரை அவரது செல்போனில் கூப்பிட்டேன். அவர் எனது போனை அட்டண்ட் செய்யவில்லை. பின் அன்று மதியம் சுமார் 1.45 மணிக்கு திரு.சேகர் அவர்கள் என்னை போனில் தொடர்பு கொண்டு, அவர் முதல் நாள் இரவே ஜான்சி மேடத்திடம் பேசிவிட்டதாகவும், என்னிடம் பணத்தை ரெடி செய்துகொண்டு செவ்வாய்கிழமை மாலை அல்லது புதன்கிழமை மாலை சேலத்தில் உள்ள அவரது வீட்டிலேயே வந்து கொடுத்துவிடும்படியும், அங்கிருந்து ஜான்சி மேடத்திற்கு பணம் வந்துவிட்ட விபரத்தை செல்போனில் சொல்லிக் கொள்கிறேன் என்றும், நாமக்கல் பகுதியே வேண்டாம் என்றும், சேலத்தில் தன் வீட்டிலேயே வந்து கொடுத்துவிடுங்கள், ஒன்றும்

பிரச்சனையில்லை, பின் நான் ஆகவேண்டியதை பார்த்துக்கொள்கிறேன் என்று சொன்னார். அன்று 24.04.2021-ம் தேதி மாலை சுமார் 4.45 மணிக்கு ஜான்சி மேடம் என்னை அழைத்தார். நான் திரு.சேகர் சொன்ன விபரங்களை அவரிடம் சொன்னேன். அவர் என்னிடம் நான் ஏற்கனவே சேகர்கிட்ட சொல்லியிருக்கிறேன் அதனால சேகர் என்ன சொல்லியிருக்காரோ அதே மாதிரி பண்ணிடுங்க என்று சொல்லிவிட்டார். திருமதி.ஜான்சி அவர்களின் செல்போன் எண்.9843032088, திரு.சேகர் அவர்களின் செல்போன் எண்.9095732664 ஆகும். நான் எனக்கு மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் கிடைக்கப்பெற்ற சிறப்பு ஆசிரியர்களுக்கான ஊதிய மானியம் ரூ.5,04,000/- இல் 50% பணம் ரூ.2,52,000/- இல் நாமக்கல் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி.ஜான்சி மற்றும் இணை மறுவாழ்வு அலுவலர் திரு.சேகர் ஆகியோர் என்னிடம் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.2,50,000/-ஐ கொடுக்காவிட்டால் எங்களது முழு ஊதிய மானிய பணத்தையும் திரும்ப அரசுக்கு செலுத்த நடவடிக்கை எடுத்து விடுவதாக சொன்னதினால் இன்று அவர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.2,50,000/- உடன் இணை மறுவாழ்வு அலுவலர் திரு.சேகர் அவர்களை சேலத்தில் உள்ள அவரது வீட்டில் இன்று மாலை சந்திக்க உள்ளேன். அவர்கள் மீது சட்டப்படி தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு (Sd/-xxxxx) 27/4/2021. இணைப்பு: 1) மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள் செ.ம.ந.க.எண.5400/சி.ப.2/2020, நாள்: 08.02.2021. 2) கருவூலச் செலுத்துச் சீட்டு.

மேற்கண்ட புகார் மனுவை பெற்று, படித்துப்பார்த்து, புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளின் அடிப்படையில் கைது செய்யப்படக்கூடிய குற்றம் ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா என்றும், எதிரிகளுக்கும், புகார்தாரருக்கும் தனிப்பட்ட முறையில் முன்விரோதம் உள்ளதா என்பது குறித்தும் இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் எதிரிகள் மீது குற்ற வழக்கு பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருப்பதும், புகார்தாரருக்கும், எதிரிகளுக்கும் முன்விரோதம் ஏதுமில்லை என்றும், புகார்தாரருடைய புகார் நம்பகத்தன்மை கொண்டது என்பதும் தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று இன்று 27.04.2021-ஆம் தேதி மாலை 15.30 மணிக்கு நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.3/AC/2021, u/s 7(b) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption

(Amendment) Act, 2018-ன்படி மேற்படி எதிரிகள் மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் மனு, புகார்தாரர் ஆஜர் செய்த 1) மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள் செ.ம.ந.க.எண.5400/சி.ப.2/2020, நாள்: 08.02.2021 மற்றும் 2) கருவூலச் செலுத்துச் சீட்டு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர், நாமக்கல் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

(A.T. ஜெய்குமார்) 27.04.2024.
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.